**“பூசலார்நாயனாரின் பத்தியில் சீர்மிகு சிந்தனை”**

*முனைவர் செ.மோகன் குமார்*
*ஆசிரியர் கல்விக் கழகம், ஈப்போ வளாகம்*

**1.0 முன்னுரை:**

*சைவசமயம் புவியில் தோன்றிய வரலாற்றினை அறுதியிட்டுக் கூறவியவில்லையானாலும், சங்ககாலம் முதல் நால்வர், நாயன்மார் காலம்வரை சைவசமயநெறிமுறை பிசகில்லாமல் சைவர்களால் பின்பற்றப்பட்டு வந்துள்ளதை நல்லறிஞர் பெருமக்கள் உணர்வர். காலத்தின் கோலத்தால் சங்கமருவிய காலத்தில் சைவசமயம் வலுகுன்றி, பிற சமயங்களின் தாக்கம் மேலோங்கி சமணமும், பௌத்தமும் தமிழகத்தில் தலையெடுத்தன எனலாம். இருந்தபோதிலும் சைவம் தம்நிலையில் நிலைதடுமாறாமல், சாம்பலில் தீபோல் கனன்று வந்துள்ளது தெளிவு. சைவம் தழைக்க நால்வர் தோன்றி பெரும் மறுமலர்ச்சியைத் தமிழ் மண்ணில் விதைத்தனர். பின்னர் நாயன்மார்கள் தோன்றி சைவசமய வளப்பத்தை மேலும் நிலைநாட்டி வலுப்பெறச் செய்தனர். 12ஆம் நூற்றாண்டில் மலர்ந்த பெரிய புராணம் தமிழ்மறையாக 63 நாயன்மார்களின் திருவரலாற்றை நிறைவாக முழுமைப்படுத்தியது எனலாம். திவ்விய இவ்வரலாற்றில் இடம்பெற்ற பூசலார் நாயன்மாரின் அரும்பெரும் பத்தித் திறத்தின் சீர்மிகுச் சிந்தனையை எடுத்தியம்புவதே இவ்வாய்வின் உள்ளீடாகும்.*

**1.1 ஆய்வின் சிக்கல்**

*இற்றைய பத்தி சைவசமயத்தினரிடையே உறுதியாக நிலைபெற்றிருந்தாலும் பொதுவாக நோக்கில் புறவழிபாட்டு முறையையே பெருபாலானவர்கள் பின்பற்றிவருவது மெய்ம்மையாக அறியமுடிகின்றது. அதிலும் சடங்கு முறையும், வெற்றாரவாரங்களும், பகட்டும் பத்திமுறையில் நிரம்பவே ஊடுருவியிருப்பது மறுக்கவியலாத உண்மை. அதிலும் எளிய வழிபாட்டு முறைகளைச் சைவம் முன்னெடுத்தாலும், அதனை முழுமையாகப் பின்பற்ற பலர் முன்வருவதில்லை. அதிலும் அகவழிபாட்டு முறையைவிட புறவழிபாட்டு முறைக்கே சைவர் அதிமுக்கியம் கொடுப்பதாக ஆய்வாளர் கருதுகின்றார். ஆகவே, இதனைக் கருத்தில் கொண்டே, பூசலார் நாயனாரின் அகவழிபாட்டு முறையில் மறைந்துள்ள உயிர்ப்புமிகு மெய்ம்மைகளை வெளிக்காட்டவே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.*

**3.0 ஆய்வின் நோக்கம்**

*3.1 அகவழிபட்டு முறையையும் எளிய வழிபாட்டு முறையையும் சைவசமய சார்ந்த பயிற்சி ஆசிரியர்கள் உணர்ந்துப் போற்ற வேண்டும்.*

*3.2 பூசலாரின் எளிய பத்தி சிறப்பின் மெய்ம்மையைச் பயிற்சி ஆசிரியர்கள் உணர்ந்து பின்பற்ற வேண்டும்.*

**4.0 ஆய்வின் வினா**

*4.1 அகவழிபாட்டு முறையிலும் எளிய வழிபாட்டு முறையிலும் புதைந்துள்ள சீர்மிகு சிந்தனையும் மெய்ம்மை கருத்துகளும் எவ்வகையில் சைவர்களுக்குத் தெளிவினைத் தந்து பயன் தருவன?*

**5.0 ஆய்வின் முக்கியத்துவம்**

*பெரிய புராணத்தைச் சைவசமயத்திற்கு அருளி, பெரும் பேற்றினைப் பெற்றவர் தெய்வச்சேக்கிழார் பெருமானார் ஆவார். இவரின் இப்படைப்புக்கு வழிகோலியவர் திருத்தொண்டர் புராணத்தை அருளிய அருள்நெறி ஞானியர் சுந்தரர் ஆவார். பெரிய புராணம் என்பது எளிமையான ஒன்றல்ல. இது ''திருத்தொண்டர் மாக்கதை'' என்பார் சிரீஞானசம்பந்த தேசிகர் (நடராசன், 2007: iii). பெரிய புராணம் சைவசமய திருமுறைகளுள் 12-ஆம் திருமுறையாகப் போற்றப்படுகின்றது. சோழநாட்டு அரசர் குலோத்துங்க சோழரின் தூண்டுதலின் பேரில், தெய்வச்சேக்கிழார் பெருமானார் பெரிய புராணத்தை அருளினார். தில்லை நடராசப்பெருனாரே சேக்கிழார் பெருமானாருக்கு, ''உலகெலாம் உணர்ந்து'' எனும் அடியெடுத்துக் கொடுத்ததாக வரலாறு உரைக்கின்றது (நடராசன், 2007: xiii).*

*இற்றைய வழிபாட்டுமுறை சைவர்களிடையே பலவாறு மருவி ஆட்டம் பாட்டம், கேளிக்கை, ஆரவார அங்கலாய்ப்பு, பகட்டு என மாறி உண்மை ஒழுகலாற்று வழிபாட்டு முறையினின்று வெகுதூரம் சென்றுவிட்டது. பல ஆயிரம், நூறாயிரம் என்று பணம் வழிபாட்டில் செலவுசெய்யப்படுகின்றது. நேர்த்திக்கடன் என்ற பெயரிலும் வழிபாட்டுமுறை சடங்காக வெறுமனே பின்பற்றப்படுகின்றது. உண்மை வழிபாட்டு நெறிமுறையைச் சைவர்கள் உள்ளார்ந்து உணரத் தவறிவிட்டால், நாளடைவில் செறிவான வழிபாட்டுமுறை பின்தள்ளப்பட்டு, அவமான வழிமுறையே முதன்மையாகிவிடும். இவ்வாய்வு சைவசமய மெய்ம்மை வழிபாட்டு முறைக்கு ஓரளவேனும் நலஞ்செய்யக் கூடும் என்பதே ஆய்வாளரின் கருத்தாக அமைகின்றது.*

## ***6.0 எல்லையும் ஆய்வுக்குட்பட்டோரும்***

*கல்விக்கழகத்தில் தமிழ்ப்பிரிவில் பயிலும் பயிற்சி ஆசிரியர்களின் பாடத்திட்டத்தில் பூசலாரின் வரலாறு போதிக்கப்படுவதால், பயிற்சி ஆசிரியர்களின் களமே ஆய்வின் எல்லையாக உறுதிசெய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வு ஈப்போ ஆசிரியர் கல்விக்கழகத்தில் தமிழ்ப் பிரிவில் இரண்டாம் ஆண்டில் பயிலும் இருபது Q4 பயிற்சி ஆசிரியர்களிடம் மேற்கொள்ளப்பட்டது.*

## *7.0 ஆய்வின் அணுகுமுறை*

*பயிற்சி ஆசிரியர்களிடம் பூசலாரின் வரலாற்றினையும் அகவழிபாட்டு நெறிமுறையினையும் நிறைவாகப் போதிக்கப்பட்டு, பின் அவர்களிடம் எழுப்பபட்ட ஐந்து நேர்காணல் கேள்விகளின் அடிப்படையில் தரவுகள் பெறப்பட்டன.*

## *8.0 தரவுகள் பகுப்பாய்வு*

*பயிற்சி ஆசிரியர்கள் மூலம் பெறப்பட்ட கருத்துகளையும் விளக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு, அகவழிபாட்டின் நெறியினைப் பிற சான்றுகளுடம் ஒப்பிட்டு ஆய்வாளர் விளக்கத்தை எழுதியுள்ளார்.*

## *9.0 பூசலார் நாயனார்*

*பூசலநாயனாரின் வரலாற்றைப் பெரியபுராணம் கூறும் பாங்கு அருமையானது. 63 நாயன்மார்களுள் தனித்தன்மை வாய்ந்தவர் இவர். இவர் தொண்டை நாட்டில், திருநின்றவூரில் மறையவர் குலத்தில் தோன்றினார். வேதங்களை நன்கு கற்று, சிவனையே எந்நாளும் தொழுது வந்தார். எளியவரான இவர், சிவனுக்குக் கோவில் கட்ட முயன்றார். பொருள்பலம் இல்லாத கரணியத்தால், தம் மனத்தினிலே இறைவருக்குக் கோவில் எழுப்பினார். கோவில் கட்டுமான வடிவங்களை எழுப்பி, கிணறு, குளம் போன்றவற்றைச் செய்து, குடமுழுக்கு நாளையும் மனத்திலேயே உறுதிசெய்தார்.*

*அதேவேளை, காடவர்கோன் மன்னன் இறைவருக்குத் தம்செல்வத்தைக் கொண்டு காஞ்சியில் ஆலயம் ஒன்றனை எழுப்புகின்றார். ஆலய குடமுழுக்கு நாளும் வருகின்றது. முதல்நாள் இரவில்*

*சிவன் மன்னரின் கனவில் தோன்றி, பூசலார் நாயனார் கட்டிமுடித்த ஆலயத்திற்கு முதலில் சென்று அருள்பாலித்துவிட்டு, பிறகு வேறொரு நாளில் மன்னன் எழுப்பிய ஆலயத்திற்கு வருகிறேன் என்று திருவாய் மலர்ந்தருளினார். கண் விழித்த மன்னன், நிலைதடுமாறி விடுகின்றார். அவரின் நாட்டில் மன்னனுக்குத் தெரியாமல் யார் ஆலயம் எழுப்பியது என்று விசாரிக்கின்றார். அப்படி யாரும் ஆலயம் எழுப்பவில்லையென்றே பதில் கிடைக்கின்றது. பிறகு, தானே பூசலார் நாயனார் ஊருக்குச் சென்று, அவரையே அணுகிக் கேட்கின்றார். அப்போது, பூசலார் நாயனார் தன் மனத்தினிலேதான், ஆலயம் எழுப்பியதாகவும் அதற்குதான் குடமுழுக்குச் செய்யவிருப்பதாகவும் சொல்லுகின்றார். சிவனார் தம்மிடம் மலர்ந்தருளியவற்றை மன்னன் பூசலாரிடம் தெரிவித்தார். கேட்டமாத்திரத்தில் பூசலார் மருண்டு, சிவனாரின் பேரருள் பெருங்கருணையை நினைந்து நெக்குருகின்றார். மன்னனும் நெக்குருகி பூசலாரின் பத்திக்குப் பணிகின்றார். பூசலார் தமது மானதக்கோவிலில் சிவபெருமானுக்குக் குடமுழுக்கும் செய்து, சிலகாலம் சிவவழிபாட்டில் திளைத்து இறைவரின் திருவடிப் பேற்றைப் பெற்றார்.*

***9.1 பூசலாரின் சீர்மிகுச் சிந்தனையும், பயிற்சி ஆசிரியர்களின் கருத்தாக்கமும்***

***9.1.1 கோவில் வழிபாட்டின் முக்கியம்***

*சைவசமயத்தில் ஆலய வழிபாடு அதிமுக்கியமாகக் கருதப்படுகின்றது. 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' எனவும், "கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" எனவும் ஔவையார் கூறியிருப்பது சான்று. இருபது பயிற்சி ஆசிரியர்களுள் 14 பேர் (70%) ஆலயம் வழிபாட்டு முறையை ஏற்றுள்ளனர். மீதம் அறுவர் (30%) ஆலய வழிபாடு தேவையில்லையென்று உரைத்துள்ளனர். ஆலய வழிபாட்டு முறையினை ஏற்றுள்ள பயிற்சி ஆசிரியர்கள், மனிதர்கள் தங்கள் கவலையையும், வேண்டுதல்களையும், முன்வைக்கும் இடமாக ஆலயத்தைக் கருதுகின்றனர். மனத்தை ஒருநிலைப்படுத்தி, அமைதியை நாடியே கோவிலுக்குச் செல்வதாக உரைக்கின்றனர். அதிலும், கோவில் தளங்களில் இறைலய காந்த அலைகள் இருப்பதால், அவை பக்தர்களுக்கு நன்மை பயக்கும் என்றுரைத்திருப்பது ஆழ்வினை அறிவுத்திறம் மிக்க கருத்தாக அமைகின்றது. இவ்வாறான இறைலயத்தை இல்லத்தில் பெறுவது முடியாத ஒன்று. தவிர, பண்பாட்டு நெறிமுறையோடு வழிபாடு மேற்கொள்ள ஆலயம் அடித்தளமிடுகின்றது என்று உரைக்கின்றனர். முறையாகப் பூசனைகளை மேற்கொள்ளும் ஆலயங்களில் இறைலயம் நிரம்ப இருக்கும். வழிபாட்டு ஒழுங்கை, ஆலய வழிபாடு பேணுவதோடு ஊழ்வினையும் அகலும் என்கின்றனர். கோவில் வழிபாடு அருகினால், நாளடைவில் இல்லவழிபாடும் குறைந்துவிடும் என்றுரைப்பது உள்ளமை உன்னதத்தக்கது.*

***9.1.2 கோவில் வழிபாடு முக்கியமில்லை***

*ஆறு பயிற்சி ஆசிரியர்கள் (30%) கோவில் வழிபாடு அவசியமில்லையென்கின்றனர். வசிக்கின்ற இடங்களில் குறிப்பாக இல்லங்களில் இறைவழிப்பாட்டினை மேற்கொள்ளலாம் என்றுரைக்கின்றனர். கோவில் இன்று பணம் சம்பாதிக்கும் இடமாக மாறிவிட்டதால், தூய வழிபாடு அங்கு அருகிவிட்டதென சிலர் கருத்துரைகின்றனர். இல்லத்தில் முறையாக வழிபடாவிட்டால், கோவிலிலும் முறையாக வழிபடாமல் போய்விடும். அதனால் முறையாக இல்லத்தில் பூசனைசெய்ய வேண்டும் என்று கருதுகின்றனர். இல்ல வழிபாட்டில் முழுமையாகத் திளைத்து, நாமே தூபத் தீபம் காட்டி, வேண்டிய பத்திப் பாடல்களைப்பாடி நிறைவாக இறைவரை வழிபடலாம். கோவிலில் இவ்வாறு செய்ய முடியாது என்கின்றனர். மனத்தூய்மையாக இருந்து, எங்கும் நீக்கமற நிறைந்துள்ள இறைவரை இல்லத்திலிருந்தும் வழிபடலாம் என்று பகருவதும் உணர்தற்பாலது.*

***9.1.3 பெரிய கோவில் கட்டுமானம் தேவை***

*மூன்று பயிற்சி ஆசிரியர்கள் மட்டும் (15%) பெரிய கோவில் கட்டுமானங்கள் தேவையென்றனர். இறைவருக்குக் கோவில் எழுப்பவது சிறந்த பணியாகும். பெரிய கோவில் கட்டுமானங்கள் கட்டடக்கலையின் சிறப்பாகும். இவை நாளடைவில் சிறந்தும் காலத்தைக் கடந்தும் இருக்கும் என்பதோடு பெரிய கட்டுமானங்களில் அதிக சக்திகள் இருக்கும் என்கின்றனர். பெரிய கோவில் தலங்களில் உள்ள கோபுர உச்சியில் ஐம்பொன் கலசங்கள், மின்காந்த அலைகளை ஈர்த்து இடிதாங்கிகளாகச் செயல்படுகின்றன. இதனால் பக்தர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும். சிற்சில கால்கோவில் தலங்கள் வைத்தியச் சாலைகளாகவும், குமுகாய நற்பணிச் செயலகங்களாகவும் இருப்பதென்றுரைப்பது இவர்களின் நற்சிந்தனையாக மிளிர்கின்றன.*

### *9.1.4 பெரிய கோவில் கட்டுமானம் தேவையில்லை*

*17 நபர்கள் (85%) பெரிய கோவில் கட்டுமானங்கள் தேவையில்லையென்றனர். இறைவர் எங்கும் எதிலும் இருப்பார். தூணிலும் துரும்பில் இருக்கும் இறைவர் பெரிய கோவில் தளங்களில் மட்டும்தான் இருப்பார் என்பதில்லை. அதனால் அதிக செலவில் கோவில் கட்டுவது தேவையற்றது. தவிர, பத்திக்குத் தூய்மையான மனமே போதும். பெரிய கட்டுமானங்கள் தேவையற்றது. வீண்செலவு தேவையற்றது என்கின்றனர். மேலும், இறைவர் எளியவர். அவருக்குப் பகட்டும் ஆடம்பரமும் தேவையில்லை. அதனால் பெரிய பெரிய கோவில் கட்டுமானம் தேவையில்லை. பூசலாரின் வரலாற்றினை மேற்கோள்காட்டுகின்றனர். பதிலாக மிகைப்பணத்தை வேறு குமுகாய நற்செயல்களுக்குப் பயன்படுத்தலாம். கோவில் கட்டட அளவு முக்கியமல்ல. பக்தனின் தூய மன வழிபாடே முக்கியம். இன்றும் குகையும் மலையும் வழிபாட்டு இடமாகத் திகழ்கின்றன. அதனால் பெரிய பெரிய கட்டடங்கள் தேவையில்லை. மாறாக, பணத்தைக் கல்விக்குச் செலவிடுவது சிறப்பு என்றுரைக்கின்றனர். உண்மை வழிபாடே மேன்மையைத் தரும் என்பது இவர்களின் கூற்றாக இருக்கிறது. எளிமையே முக்கியம். ஏழை எளிய மக்களுக்குச் செலவு செய்யலாம். பெரிய அளவில் கோவில் கட்டி, சுற்றுலாத் தலமாக மாற்றி நன்கொடை பெறுவது நன்றன்று. இறைவழிபாட்டில் ஆடம்பரம் தேவையற்றது. கண்டபடி கோவில் எழுப்புவதும் நன்றன்று. ஒரு வகையில் இஃது இறைவரைக் குறைத்து மதிப்பதாகும் என்றுரைக்கின்றனர். தூய்மையாக மனத்தில் வழிபட்டாலே போதுமானது. புதிய கோவில் கட்டுமானங்களைத் தவிர்த்து, இருப்பதை பாதுகாப்பதுதே போதும் என்று இவர்கள் கருத்துரைப்பது சமூகவியல் நெறிசார் கருத்தாக மிளிர்கின்றது.*

### *9.1.5 அகவழிபாடு புறவழிபாட்டைவிட முக்கியம்*

*அகவழிபாடு புறவழிபாட்டைவிட முக்கியம் என்று 19 (95%) பயிற்சி ஆசிரியர்கள் உரைத்திருக்கின்றனர். இறைவர் அன்புருவானவர். அவரை அகங்கொண்டு வழிபடுவதே மேல். புறவழிபாடு பலரால் கடமையாகப் பின்பற்றப்படுவதாகக் கருதப்படுகின்றது. உள்ளார்ந்த அன்புருக்கமே உண்மை வழிபாட்டின் அருமை என்கின்றனர். புறவழிபாடு பல வேளைகளில் புறஆரவாரங்களையும், தனிமனித ஆற்றலையும், பதவி பகட்டினையும் காட்டுவதாக அமைகின்றது. தவிர, அகவழிபாட்டிலேதான் மனத்தை ஒருமுகப்படுத்தி உள்ளார்ந்து வழிபட முடியும். அகவழிபாடு மனிதனைத் தூய்மையாக்கி, நற்பண்புகளை ஊக்குவித்து அமைதியடையச் செய்கின்றது. தவிர, இறைவர் கடந்து உள்ளிருப்பவர். அதனால் உள்ளார்ந்து தேடுவதும், உணர்வதும் வேண்டும். மேலும் இற்றைய கோவில் வழிபாடுகளில் கூடும் கூட்டத்தினூடே உண்மையாக இறைவரை வழிபட முடிவதில்லை. மேலும் அமைதியாகவும், நிம்மதியாகவும் இறைவரை வழிபட முடிவதில்லை. புறவழிபாடு பெரும்பாலும் வெளிப்புனை நிறைந்ததாகத் தென்படுகின்றது என்ற இவர்களது சிந்தனை கால மாற்றத்தின் சீர்மிகு வெளிபாடு எனலாம். அதனால், அகங்கொண்டு அவரவர் இல்லத்தில் வழிபடுவதே நலம். அகத்தோடு வழிபட்டால் எவ்வமயமும் இறைவழிபாட்டில் திளைத்து இன்புறலாம் என்று கருத்துரைக்கும் இவர்களது எண்ணம் போற்றுதற்குரியது.*

### *9.1.6 புறவழிபாடும் வேண்டும்*

*கடுமையாக உழைக்கும் தொழிலாளர்களுக்கு அகவழிபாடு சாத்தியப்படாது. அவர்கள் புறவழிபாட்டையே விரும்புவர். சூழலுக்கு ஏற்ப இரு வழிபாட்டு முறையையும் மேற்கொள்ளலாம் என்று ஒருவர் கூறியிருக்கின்றார். இத்தகுக் கருத்துரையிலும் உண்மை இல்லாமல் இல்லை.*

### *9.1.7 தமிழர் வழிபாடும் பூசனையும் தமிழ்மொழியில் வேண்டும்*

*தமிழர் வழிபாடும் பூசனையும் தமிழ்மொழியில்தான் இருக்கவேண்டும் என்று அனைத்து ஆய்வுக்குட்பட்டோரும் (100%) முழுமையாக ஏற்றுள்ளனர். செய்யும் வழிபாடும் பூசனையும் அவரவர் தாய்மொழியில் இருந்தால்தான் புரிந்து வழிபட முடியும். மனங்கொண்டு பொருளுணர்ந்து வழிபட்டால்தான் முழுமையான புரிதல் ஏற்பட்டு, பயனும் பெறலாம் என்று கருத்துரைக்கின்றனர். சைவசமய நாயன்மார்களின் திருமுறைகளை ஓதிவழிபடுவது சிறப்பு. தனியொரு மொழி இறைவருக்குத் தேவையில்லையானாலும், தாய்மொழியில் பூசிப்பதும், வழிபடுவதும் அவசியம். புரியாத மொழியில் வழிபடுவது முழு பயனைத் தராது. தாய்மொழி அழியாமல் காக்கப்படும் என்பதும் இவர்களது கருத்தூற்றாக மிளிர்கின்றது.*

### *9.1.8 எளிமையான வழிபாட்டு முறை*

*இறைவர் முழுமுதற் பேரருள். அவர் முழுநிறைவானவரும் விருப்பு வெறுப்பும் அற்றவரும், அனைவருக்கும் சமமானவரும் ஆவார். அவர் எதனையும் மனிதர்களிடம் எதிர்பார்க்கவில்லை. அதனால் எளிய பூசனை முறையே போதுமானது. வழிபாடும் என்பது உடலை வறுத்தி, கடுமையாக இருக்கக் கூடாது. எளிமையாக இருந்தால், அனைவரும் எளிதாக வழிபாடு செய்யலாம். சலம், பூ, தூபதீபம் என வழிபாடு எளிமையுள்ளதாக இருப்பது நலம். நேர்த்திக்கடன் என்ற பெயரில் வழிபாடு பெரும் பொருட்செலவில் இருப்பது வேண்டாம் என்றுரைக்கின்றனர். வழிபாட்டில் பகட்டும், ஆடம்பரமும் தேவையில்லை. இறைவர் அதனை விரும்பமாட்டார். ஆடம்பர வழிபாடு மன அமைதியைத் தராது. மக்கள் வழிபாட்டிற்குச் செய்யும் ஆடம்பர செலவினங்களை மீதப்படுத்தி, மக்கட்சேவையாற்றலாம். ஏழைஎளியவர்களுக்கு உறுதுணையாக இருக்கலாம் என்பதோடு மனத்தூய்மையோடு எளிமையாக வழிபட்டாலே, இறைவர் செவிசாய்ப்பார் என்பது இவர்களின் தகைமேவிய நலஞ்சார் கருத்துரைக்குச் சான்றாக அமைகின்றது.*

## *10.0 ஒப்பீட்டு கருத்தாக்கத் தொகுப்பு*

*பூசலார் நாயனாரின் வழிபாட்டு நெறிமுறை அக வழிபாட்டு நெறியாகும். மனத்திலே கோவில் எழுப்பி உவகைகொள்வது அகப் பூசனையாகும். உண்மையான அகவழிபாட்டு முறைக்கும் இறைவர் செவிசாய்த்து அருள்புரிவார் என்பது தெளிவு. மன்னன் எழுப்பிய கோவில் குடமுழுக்குக்கும் இறைவர் வருவதாகக் கூறுவதும் அருமை. அதிலும் அருமை, எளிய அடியார்களின் எளிய வழிபாட்டு முறைக்கும் செவிசாய்த்து வருவது அருமையிலும் பெருமை. எளிமையான அகவழிபாடு, பெரிய பெரிய ஆலய கட்டுமானங்களைவிட சிறந்தது என்பது தெளிவாகின்றது. பத்தியில் பகட்டைக் காண்பிக்காமல், எளிமையைக் கண்டு இறையருள் பெறுவது பெருமையன்றோ.*

> *"காயமே கோவிலாக கடிமனம் அடிமையாக*
> *வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக*
> *நேயமே நெய்யும்பாலா நிறையநீர் அமைய ஆட்டிப்*
> *பூசனை ஈசனார்க்குப் போற்றிக் காட்டினோமே" (அப்பர் தேவாரம்)*

*இன்றைய சூழலில் மலேசியத் திருநாட்டில் கோவில்களுக்குப் பஞ்சமில்லை. எண்ணறற்ற ஆலயங்கள் நாடு முழுதும் பரவி, விரவி கிடக்கின்றன. அதற்காகப் பல நூறாயிரம் வெள்ளி ஆண்டுதோறும் செலவாகின்றது. மில்லியன் வெள்ளி செலவில் கோவில் கட்டுமானங்கள் நம் நாட்டில் புத்துயிராய் முளைத்தெழுந்துள்ளன. கணக்கில் அடங்கா வெள்ளி செலவில் வண்ணப்பூச்சுகளும் பூசப்பட்டு, யாகம், சிலைகள், கோபுரங்கள், பல்வேறு மாடமாளிகைகள், பூசனைகள், தீமிதி என சடங்கு சமயமாக வழிபாட்டு முறை மெருகேறியுள்ளது. ஓர் ஆலயத்தில் பல சிலைகளும், கருவறைகளும் கட்டுவதென்பது இன்றைய புதுமையான வெளிப்பாடாக இருக்கின்றது. ஆகமமுறைப்படி ஆலயக் கட்டுமானங்கள் தற்சமயம் இல்லையென பல சமய நெறியாளர்கள் உரைப்பதை ஆலயப்பொறுப்பாளர்கள் செவிசாய்ப்பதில்லை.*

*ஆலயத்திற்கு வரும் பத்தர்களைக் கவர, ஆலய கட்டுமான மூர்த்தங்களைப் பலவகைப்படுத்திப் பணம் திரட்டுவதையே குறியாகக் கொண்டு செயல்படும் ஆலய பொறுப்பாளர்கள் கண்டனத்திற்குரியவர்கள். அதிலும், கோவில் திருவிழாவென மில்லியன் கணக்கில் நாட்டில் ஆண்டுதோறும் செலவுகள் செய்யப்படுகின்றன. இன்னும் ரத ஊர்வலம், திரைப்படம் என்று கணக்கில் அடங்காச் செலவுகள். அதற்கு மக்களிடையே வசூல்கள். அதிலும் புதுப்புது பூசனைகள், குடமுழுக்குகள் என்று ஆலய வழிபாட்டுமுறை அடங்காது செல்வதைப் பார்த்தால் உண்மைப் பத்திமுறையும் வழிபாட்டு நெறிமுறையும் சைவ சமயத்தினர் உண்மையில் உள்வாங்கியுள்ளனரா என்பது பெரிய ஐயப்பாடே! அதிலும் சடங்கு, யாத்திரை, காணிக்கை, நேர்த்திக்கடன் என்ற பெயரிலும் கணக்கற்ற செலவினங்கள் பத்தியின் அடைப்படையில் நிகழ்கின்றன. இவற்றையெல்லம் சீர்தூக்கிப் பார்த்துச் சிந்தித்தால், பெரிய புராண வழிபாட்டு நெறிமுறைகள் உண்மையாக இன்னும் வலுப்பெறவில்லையோ என எண்ணத் தோன்றுகின்றது. திருமூலர் இதனைச் செம்மையாகக் காட்டுவார் பத்தாம் திருமுறையான திருமந்திரத்தில்,*

> *“நாடும் நகரமும் நற்றிருக் கோவிலும்*
> *தேடித் திரிந்து சிவபெருமான் என்று*
> *பாடும்மின் பாடிப் பணிமின் பணிந்தபின்*
> *கூடியநெஞ்சத்துக் கோவிலாக் கொள்வனே” (10:1445)*

*பரம்பொருளான இறைவர் வேரெங்கும் இல்லை. மெய்யான உள்ளத்தில் கோவில் கொண்டுள்ளார் என்பது தெளிவு. உள்ளதைக் கூறவேண்டுமெனில் இன்னும் நம்மினச் சமயத்தினரின் வழிபாட்டு நெறிகள் பயத்தின் அடிப்படையிலேயே வலுப்பெற்றிருக்கின்றது எனலாம். பலர் இன்னும் ‘கடவுள் குற்றமாகிவிடும்’ என்று சொல்வதை நம்மிடையே கேட்க முடிகின்றது. ஆலய வழிபாடு என்பது பயத்தின் பெயரில் வருவதல்ல. மனிதனைத் தண்டிப்பது கடவுள் பணியல்ல. உலக வாழ்வினை உய்த்துணர்ந்து, நற்பேற்றினைப் பெற்று, பழ வினைகளையறுக்கவே கடவுள் நம்மை ஆட்படுத்தி இறுதியில் பிறப்பைப் போக்கி முக்தி இன்பத்தைத் தருகின்றார் (தண்டாயுதம்,1985:64). கடவுள் அன்பும் கருணையும் மிக்கவர். நாம் படும் துன்பம் யாவும் நம் வினைபோக்கே. வினையைப்போக்கினால்தான் ஆன்மா நற்கதி பெறும். அதனை நாம் தெள்ளென உணர்ந்து விட்டால், கோவில் வழிபாட்டில் காணிக்கையும், பேரமும், வேண்டுதலும், சடங்குகளும் குறைந்துவிடும். பல ஆயிரமும், நூறாயிரமும் செலவு செய்தால்தான் உண்மை பத்தி என்பது பொய்யான ஒன்று.*

> *“நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து*
> *வீடகத்தே புகுகின்றேன் மிகப்பெரிடும் விரைக்கின்றேன்” (அப்பர் தேவாரம்)*

*என்று அருமையாக உரைப்பார் அப்பரடிகள். போலியான மனித வாழ்க்கையை எண்ணி இறைவர் நகைப்பார். பல ஆயிரம் செலவுசெய்து இறைவழிப்பாட்டினை மேற்கொள்ளும் ஒருவரது வினை எளிமையாகப் போகாது. அது போலியே. பாவங்களைச் செய்துவிட்டு, பல நூறாயிரத்தில் வழிபாடு செய்தால், இறைவரின் அருள் கிட்டுமா என்ன? அல்லது இறைவர்தாம் இத்தகு ஆன்மாவுக்கு அருள் தருவாரா?*

*பத்தி என்பது உள்ளார்ந்து உண்மையாகவும், அன்பாகவும், கருணையாகவும் இருக்க வேண்டும். ஆறே நாள்களில் கண்ணப்பநாயனார் இறையருள் பெற்று இறைவரடி சேர்ந்தார். தம்*

*கண்ணைத்தோண்டி இறைவருக்குச் சாற்றியவர் கண்ணப்பர். எந்தவொரு எதிர்பார்ப்பும் இல்லாமல் வழிபாடு இருக்க வேண்டும். அத்தகு வழிபாட்டையே இறைவர் மனமுவந்து ஏற்பார் என்பது கண்ணப்பர் புராணம் உரைக்கும் மாண்பு. இதனைத்தான் பூசலார் நடைமுறைபடுத்தி, இறைவரின் பேரருளைப் பெற்றார். பெரும்பொருட்செலவால் எழுப்பும் கோவில் கட்டுமானங்களுக்கு நாம் எதிரியல்லர். வெறுமனே எழுப்பிய கட்டடத்தை மட்டும் இறைவர் ஏற்பாரில்லை. முன்பு நம் அரசர்கள் இதனை முன்னெடுத்துத் தங்கள் பெருமையை ஒருவேளை பறைசாற்றியிருக்கலாம். இறைவர் பெரியவர், மாண்பானவர் என்று கூறுவதற்கே கோவில் கட்டுமானங்கள் பெரியதாக எழுப்பப்பட்டன. தவறில்லை. ஆனால், அத்தகு கட்டுமான வழிபாட்டைத்தான் இறைவர் விரும்புவார் என்றும் அதில்தான் குடியிருப்பார் என்பதுதான் தவறு. பகட்டான, அலங்கார வழிபாட்டு நெறிமுறைகளைச் சைவம் முன்னெடுக்கவில்லை. இதனைப் பூசலார் வரலாறு தெள்ளென உரைப்பதை நாம் கவனிக்கவேண்டுவது. தனியொருவராகப் பூசலார் செய்த வழிபாட்டு நெறிமுறைகளை நாம் உண்மை கண்கொண்டு பார்த்துச் சிந்திக்க வேண்டும்.*

*வானளாவிய கட்டுமானங்கள் கொண்ட ஆலயங்களிலும், பல ஆயிரம் வெள்ளியில் நடத்தும் பூசனைகளிலும், யாகங்களிலும் தான் இறைவர் இருப்பார் என்பது ஏற்புடைமையன்று. உண்மையான பத்திக்கொண்டு, எளிமையான அகவழிபாட்டு முறையையும் இறைவர் ஏற்பார் என்பது சைவசமயம் கூறும் தெளிவு. அதிலும் இன்று பல நூறாயிரம் வெள்ளி செலவில் ஆலயம் எழுப்பவது நம் நாட்டில் நாகரிகமாகவும், பண்பாடாகவும், நெறிமுறையாகவும் கொள்ளப்படுகின்றது. சிலர் இதனைப் பெருமையாகக் கொள்கின்றனர். இது தவறாகும். பெரிய பொருட்செலவில் எழுப்பப்படும் ஆலயத்தில் உண்மை வழிபாடு இருக்கும் என்பதும் உறுதியில்லை. அதிலும் இன்று, மக்களிடம் பலவாறு சொல்லி, சில தருணங்களில் ஏமாற்றியே ஆலயங்களும் பூசனைகளும் மேற்கொள்ளபடுகின்றன. வெறும் சடங்கு மிகுந்த வழிபாடே பலவிடங்களில் முன்னெடுக்கப்படுகின்றது அவலம் நிறைந்தது. அத்தகு ஆலயங்களில் பல வேளைகளில் உண்மையான வழிபாடும் நடப்பதில்லை. சிலர் தங்களின் பெருமையையும், பகட்டையும் ஆலயம் எழுப்புவதிலும் பூசனைகளை மேற்கொள்வதிலும் காட்டுகின்றனர். அப்பொழுதுதன் இறைவரின் அருளைப் பெறலாம் என்று நினைக்கின்றனர். அத்தகு நினைப்பு முற்றிலும் தவறாகும். இறைவர் உண்மையான அன்புக்கும், பத்திக்குமே அடிபணிவார்.*

> *“எண்ணாயிரத்து ஆண்டு யோகம் இருக்கினும்*
> *கண்ணார் அமுதினைக் கண்டறிவார் இல்லை*
> *உள்நாடி உள்ளே ஒளிபெற நோக்கினால்*
> *கண்ணாடி போலக் கலந்து நின்றானே” (10:603)*

*இருந்த இடத்தில் உண்மை உணர்வோடு இறைவரை நெக்குருக வழிபட்டால், இறையருளை நாம் பெறலாம் என்கிறார் திருமூலர்.*

*ஆனால், எப்படி உள்ளார்ந்து இறைவரை வழிபடுவது என்பதுதான் நம் முன்னே இருக்கும் ஐயமும், வினாவும் ஆகும். இதற்கு தகுந்த வழிகாட்டி அல்லது ஆசான் தேவை. அவர்களைப் பணிந்து, வழிமுறைகளைப் பயின்று பயன்பெறுவது அருமை. கசிந்துருகி வழிபட்டால் இறைவரை உறுதியாக அடையலாம். சிக்கல் யாதெனில், கசிந்து உருக நாம் பழகவில்லை. மெய்ம்மை உணர்வும், உண்மையும், நேர்மையும், அன்பும், கருணையும் வேண்டும். மெய்ம்மையில்லா வழிபாட்டை இறைவர் ஏற்றாரில்லை. பொருள்; புகழ் மயக்கத்தில் பலர் பொய்யான வழிமுறைகளையே பின்பற்றுகின்றனர். எளிய வழியில் இறைவரின் அருளை எப்படிப் பெறலாம் என்ற நோக்கில் பலவினைகளைச் செய்கின்றனர். இறையருள் என்பது நேர்கோட்டு வழி. அஃது ஒருபோதும் வளையா! யாருக்கும் குனியா! அப்படியிருக்க பேராற்றல் மிக்க பெருங்கருணையாளரான இறைவரை கொல்வழியில் சென்று அடைய முற்படுவதும், முயற்சிப்பதும் பேதமை. இறுதியில், தீவினையே பயனாக நிற்கும்.*

*இருக்கும் இடத்திலிருந்தே நாம் உண்மையான வழிப்பாட்டினைச் செய்தால் இறைவர் நாம் இருக்கும் இடம் நோக்கி வந்து அருள்தருவார் என்பது உறுதியாகின்றது. அதிலும்*

*எளிமையாகவும், உறுதியாகவும், உள்ளன்போடு அகவழிபாட்டினை மேற்கொண்டால் இறைவர் அருள் தருவார் என்பது மிக வெளிப்படையாகப் பெரியபுராணத்தில் இருக்கின்றது. அதனைவிட்டு, பல்லாயிரக்கணக்கில் செலவுசெய்து புறவழிபாடு செய்வது பொருத்தமில்லாமல் இருக்கின்றது. அதிலும் ஏழ்மை நிலையில் இருப்பவர்கள் அவரவர்க்கேற்ப எளிமையாகவும் உள்ளார்ந்தும் அகவழிபாடு செய்தால், இறைவர் அருளைப் பெறலாம். தவிர, நம் உடலை வறுத்திக் கொண்டும் பலர் நேர்த்திக்கடன் என்ற பெயரில் வழிபாட்டைச் செய்வதும் இங்கு நோக்கத்தக்கது. தன்னை வறுத்திக்கொண்டு செய்யும் வழிபாட்டினைச் சைவம் முழுமையாக ஏற்கவில்லை. வழிபாட்டில் அன்பும், நெகிழ்வும் இருக்கவேண்டுமே அல்லாமல் இறுக்கம் இருப்பது தேவையற்றது. ஆட்டம், பாட்டம், கூத்தாட்டம், ஆடை, அணிகள், புற அலங்காரம் அனைத்தையும் உண்மை வழிபாடு ஏற்காது. நெறியான அகவழிபாடே உயர்ந்தது. இதனையேதான், ''தனித்திரு, பசித்திரு, விழித்திரு'' என்று பகன்றார் இராமலிங்க அடிகளார். வீண் செலவும், பகட்டும் செம்மை வழிபாட்டினைத் தாரா.*

*பூசலார் தன்னை வறுத்தியதே இல்லை. பொருள் இல்லையே என்று துயரமும் கொள்ளவில்லை. ஆயிரமாயிரம் வெள்ளி செலவு செய்யவுமில்லை. அவரது வழிபாட்டு நெறிமுறை செலவில்லாதது. திருமூலர் தெய்வம் இதனை மிக அருமையாக மொழிவார்.*

> *''உள்ளம் பெரும் கோவில் ஊனுடம்பு ஆலயம்*
> *வள்ளல் பிரானாற்கு வாய் கோபுரவாசல்*
> *தெள்ளத் தெளிவார்க்கு சீவன் சிவலிங்கம்*
> *கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே'' (10:1823)*

*திருமூலரின் உண்மை உள்ளக்கிடக்கை வெளிப்பாடாகக் கொண்டு வழிபட்டவர் பூசலார் என்பது தெளிவு. தம் உள்ளத்தையே கோவிலாக மாற்றியவர் பூசலார். இவரின் பத்திக்கு இறைவரே வருகின்றார் என்பது எத்தகுப் பத்தியின் வெளிபாடு என்பதை நாம் உணர்ந்துகொள்ள முயல்வதே பெரியது.*

*அகவழிபாட்டின் உன்னதத்தின் பெருமையை ஏன், எப்படி, எதனால் நம் சமயத்தினர் உணர்ந்து போற்றத் தவறிவிட்டனர்? பத்தியில் தெளிவின்மையும், மூடமும், பயமும், சுயநலமும்தான் கரணியமாக இருக்க வேண்டும் என்பது எமது துணிபு. தவிர, காலங்காலமாக வெறுமனே பின்பற்றும் சமய நடவடிக்கைகளும், முனைப்பில்லா வழிபாடுகளுமே இக்கீழ்மைக்கு முக்கிய கரணியம் எனலாம். சுயநலமில்லா பத்தி, வெளிபடையானதும் கருணைமிக்கதும் ஆகும். இதனை உள்ளார்ந்து போற்ற நம் இனம் தவறிவிட்டதோடு, வழிவழியாக உண்மை வழிப்பாட்டைப் பரப்பவும் வலியுறுத்தவும் மறந்துவிட்டது எனலாம். பின் 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று வழிபாட்டுநெறிமுறை வலுபெற்றுவிட்டது. சடங்கையும், வேண்டுதலையும், காணிக்கையையும் செலுத்திச் சைவர்கள் மனநிறைவுகொண்டனர். நாளடைவில் இதுவே பழக்கமானது. பொருள் சேர்ப்பவர்கள், இதனை வழக்கமாக்கினர். உண்மைநெறிமுறை அருகி, மறைந்துவிட்டது எனலாம். தவிர, எளிமையான வழிபாட்டுமுறை தாழ்வாக நோக்கப்பட்டு, புறந்தள்ளப்பட்டது. வழிபாட்டில் பகட்டும், ஆடம்பரமும், பட்டும் பீதாம்பரமும் முன்னெடுக்கப்பட்டுப் பீற்றியது சிலரின் போக்கும் வாக்கும். மில்லியன் கணக்கில் ஆலயக்கட்டுமானங்கள் இன்று நம் நாட்டில் முன்னெடுக்கப்படுவது பத்தியின் உண்மை வெளிபாடாகக் கொள்ளமுடியவில்லை. இப்போக்கினை இந்நூற்றாண்டு கவிஞரான கண்ணதாசன் தூற்றுவது நோக்கற்பாலது.*

> *''பாலுக்கும் கூழுக்கும்*
> *ஏழைகள் அலைகையில்*
> *ஆயிரம் கோவில்கள் தேவையா- பூ*
> *மாலையும் பூசையும் தேவையா'' (கவிஞர் கண்ணதாசன், 2001:322)*

*நம் நாட்டு இந்தியக் குமுகாயத்தினரின் அவலங்கள் சொல்லி மாளா. அதிலும் இளைய சமுதாயத்தினருள் பெருபாலானோரின் செய்கை கவலையில் ஆழ்த்துகின்றது. பத்தியில் பகட்டையும் ஆடம்பரத்தையும் எந்த அருளாளரும் வலியுறுத்தவில்லை. இன்னும் சிலர் பத்தி*

*என்ற பெயரில் வீட்டுக்கு வீடு சிறிய அளவில் கோவிலை எழுப்பி, திருவிழாவினை எடுத்தும், குறிசொல்லியும், உயிர்களைப் பலியிட்டும் வழிபாட்டினை மேற்கொள்கின்றனர். இத்தகு வழிபாட்டு முறையும் ஏற்புடையதன்று. சிறிய வழிபாட்டு முறைதான் என்று சைவசமயத்திற்கு ஏற்புடைமை இல்லாத ஒன்றனைச் செய்வது நன்றல்லது. உயிர்பலியிட்டு வழிபாடு செய்வது பாவச்செயல் என்பதை நம்முள் பலர் ஏற்க மறுக்கின்றனர். இத்தகு வழிபாடு தீவினையேற்றத்தைத் தரும். மேலும், ஆங்காங்கே கட்டப்பட்ட பல சிறிய வழிபாட்டுத் தலங்கள் அரசால் இன்று இடித்துத் தரைமட்டமாக்கப்படுகின்றன. இஃது அவலமன்றோ! முறைநெறியின்றி எழுப்பப்படும் ஆலயங்களில் கடவுள் குடிகொள்வாரா! எல்லையிலா பெருங்கருணையாளரான இறைவரை இப்படியா வைத்து வழிபடுவது? சிறுதெய்வ வழிபாடு நம்மிடையே இன்னும் இருந்தாலும், அதனைப் பெரும்போக்காகச் செய்வது நல்லதல்ல. நம்முள் சிலர் தாங்கள் வசிக்கும் இருப்பிடத்தின் முன், ஐந்தடியில் சிறிய அளவில் கோவிலைக்கட்டி திருவிழா அல்லது பூசனையைச் செய்கின்றனர். இறைவருக்கு நாம் ஐந்தடி வழிபாட்டை தரலாமா? பெரிய அளவில் வீடு கட்டி, நம் முதன்மை படுக்கை அறையை யாராவது ஐந்தடியில் வைத்து உறங்குவார்களா? இறைவருக்கு மட்டும் ஐந்தடி வழிபாட்டினை ஏன் இவர்கள் மேற்கொள்கின்றனர்?*

*பரம்பொருளான முழுமுதற் கடவுள் கொள்கை என்பது சைவர்களின் முத்தாய்ப்பும் பேராற்றல் சத்தியுமாகும். அதனை உணர்ந்து செயல்படுத்த சைவர்கள் முயல வேண்டும். அதிலும் எளிமையாக இறைவரின் பேராற்றல் பெருங்கருணையைப் பெற சைவம் வழிகாட்டுகிறது. அதிலும் பூசலார் போன்ற எளிய அருளாளர்கள் மிக எளிமையாக வழிபாட்டு நெறிமுறையை உண்மைப்பத்தியின் அடிப்படையில் நமக்கு தருவது உய்த்துணரபாலது. பத்தியை எளிமையாகச் செய்வதைச் சிலர் எள்ளி நகையாடலாம். இவர்கள் பூசலாரின் வழிபாட்டு நெறியை அறியாதவர்கள். அறிந்தும் சிலர் பகட்டுக்காகவும், பெருமைக்காகவும் வழிபாடுகளைப் பெரும் பொருட்செலவில் செய்வர். இவர்களின் போக்கு ஏற்புடையதன்று. தெளிந்தவர்கள் உண்மை அன்போடு வழிபாட்டினை மேற்கொள்ள தலைப்படுவது சால்பு.*

*பெரும்செலவில் பூசனையையும் வழிபாட்டினையும் மேற்கொண்டால் இறைவர் மகிழ்வார் என்பது முற்றிலும் தவறு. இத்தகு சிந்தனை போக்கினை நம் அருளாளர்கள் வெறுத்து ஒதுக்கினர். இதனை அப்பரடிகள் தம் தேவாரத்தில் கூறும் பாங்கு அலாதியானது. திருநாவுக்கரசர் அருளிய தேவாரத்தில் இடம்பெற்ற தேவாரப்பாடல் பூசனையின் எளிமையைத் தெள்ளெனப் பறைச்சாற்றுகின்றது. இறைவருக்கு நாம் மேற்கொள்ளும் பூசனையானது பகட்டில்லாமல் எளிமையாக இருப்பது முக்கியம். இறைவழிபாடு என்பது மனமும் அறிவும் சார்ந்த ஒரு நெறியாகும். வழிபாட்டில் மனமுருக வழிபாடு செய்வது உயர்நிலையாகும். அப்படி வழிபாடு செய்யும்போது, பூசனையாளர் தூய்மையான நீரையும், தூபத்தையும் கொண்டு வழிபாடு செய்வது அருமை. நீர் என்பது எங்கும் எளிமையாகக் கிடைக்கும் ஒரு பொருளாகும். அதுபோல தூபமும் எளிய பொருளே. பூசனையைச் செய்வோர், பூசனைக்கு அடிப்படையாக விளங்கும் நீரையும், தூபத்தையும் கொண்டு வழிபாடு செய்வதைச் சைவசமயம் வலியுறுத்துகின்றது. எளிமையாகக் கிடைக்கும் பொருளே சைவசமய வழிபாட்டுப் பொருளாக இருக்க, உயர்தர ஆடம்பரப் பொருள்கள் தேவையில்லை. மிகைப்பட செலவு செய்து செய்யும் ஆடம்பரப் பூசனை வேண்டாம் என்கிறார் அப்பர்.*

> *“சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்*
> *தமிழோடிசைப்பாடல் மறந்தறியேன்*
> *நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்*
> *உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்...” (4.1.6)*

*அப்பரடிகள் எளிமை கருதியே எளிமையான பூசனைப்பொருள் உண்மைப் பத்திக்குப் போதும் என்கின்றார். உள்ளார்ந்த உண்மை வழிபாட்டில், பகட்டும் வெற்று ஆரவாரங்களும் இருக்காது. இதனையே பூசலார் தம் வழிபாட்டில் மேற்கொண்டார். அதிலும் இறைவருக்கு ஆலயம் எழுப்பும் அளவிற்குத் தமக்குப் பொருள் இல்லையே என்று துயரம் கொண்டாலும், மாற்று வழியாக இருந்த இடத்தில் மனத்தினுள்ளே கோவில் எழுப்பி குடமுழுக்கும் ஏற்பாடு செய்து வழிபாடு செய்ய துணிந்திருப்பது அருமைப் பத்தியில் சீரிய சிந்தனையன்றோ!*

*ஆழ்வினை அறிவுத்திறத்தால் நாம் சிந்திக்கக்கடவது. விண்ணுயர கோவில்களைத்தான் இறைவர் விரும்புவார் என்பது பொய்யாகி போகின்றது. பெரிய ஆலயத்தை உண்மை பத்தியோடும் எழுப்பலாம். இதனைத்தான் காடவர்கோன் மன்னன் மேற்கொண்டார். மன்னனின் செய்கையையும் இறைவர் விரும்புவதே ஆகும். ஆனால், வெறும் கட்டுமானங்களை மட்டும் இறைவர் விரும்பார். அதே தருணம், அந்தளவுக்கு வசதியும் வாய்ப்பும் இல்லாதவர்கள் எளிய பூசனையை மேற்கொள்ளலாம் என்பதை உண்மை நெறியாளர்கள் உணர்தற்பாலது. அதிலும், வாய்ப்பும் வசதியும் குறைந்தவர் உண்மைவழிபாட்டினை எளிமையோடு மேற்கொண்டால் இறைவர் அருளைப் பெறலாம் என்பதையே பெரிய புராணம் ஐயந்திரிபற காட்டுகிறது. அதனால், பெரிய பெரிய ஆலயங்களைக் கட்டுவதில் தவறில்லை என்றும் பலர் கருதலாம். இப்படிச் செய்வது முழுமையாக ஏற்புடையதன்று. பெரிய ஆலயங்கள் பல மில்லியன் பொருட்செலவில் மேற்கொள்ளப்படும். அத்தகுச் செலவினங்கள் நமக்குத் தேவையா என்பதை நாம் மெய்யாகச் சிந்திக்க வேண்டும். தேவையான, அவசியமான நற்செயல்கள் நிறைய உண்டு. அத்தகு செயற்பாட்டை நாம் முன்னெடுத்துச் செய்ய பொருட்செல்வத்தைப் பயன்படுத்தி நலம்; வளம் காணலாம். தவிர, குறைந்த பொருட்செலவில் ஆலயங்களைக் கட்டி, நிறைவாக வழிபாட்டினைச் செய்யலாம் அல்லவா?*

*பெரிய ஆலயங்கள் இருப்பது, சமுதாயத்தினர் ஒன்றுகூடி பல நற்செயல்பாட்டினை நிறைவாக மேற்கொள்ளவே. அத்தகுச் செயல்பாடுகள் குமுகாய வளர்ச்சியினை முன்னெடுக்கக்கடவது சால்பு. இன்று நம் இனம் நாட்டில் பல இன்னல்களைச் சந்தித்து வருகின்றது. இனம், மொழி, பத்தி, வாழ்வியல் முறை போன்றவற்றில் முழுமையானதோர் அறிவுதெளிவு இல்லாமல் பல்வேறு குறைபாடுகள் நம்மிடையே மலிந்துள்ளன. இவற்றை எப்படிப் போக்குவது? பல மில்லியன் பொருட்செலவில் கட்டும் ஆலயக் கட்டுமானங்கள் இதற்கு வலிகோலுமா? மக்களிடையே காணும் பல வழிபாட்டு முறைகளில், உண்மை பத்தியைவிட மூடநம்பிக்கையும், ஆரவார அங்கலாய்ப்புமே மலிந்துள்ளன எனலாம். “கண்மூடி பழக்கமெல்லாம் மண்மூடி போக” என்றார் இராமலிங்க அடிகளார். பணத்தால் அபிடேகம், பாம்பு வழிபாடு, நடுஇரவு யாகம்; கழிப்பு, வழிபாடு போன்ற வழிபாட்டு முறைகள் நம் நாட்டில் நிறையவே பின்பற்றப்படுகின்றன. இவையெல்லாம், புறவழிப்பாடு முறையின் தாக்கங்கள். அகவழிபாட்டு நெறிமுறைகளை மக்கள் இன்னும் முழுமையாக முன்னெடுக்கவில்லை அல்லது இன்னும் பலர் இதனை அறிந்திலர் எனலாம். பொருள் ஆசையால், பல பத்தர்களைப் போலி பூசகர்கள் ஏமாற்றி தங்கள் பிழைப்பைப் பலபட செய்கின்றனர். உண்மை பூசனை என்பது உள்ளார்ந்து இருப்பது அவசியம். இதனையே திருஞானசம்பந்தர் கூறும் பாங்கு போற்றுதற்குரியது.*

*“காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி*
*ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது...” (3.49.1)*

*மெய்யான வழிபாட்டில் அன்பு இருக்கும். உளம் கசிந்து கண்ணீர் வரும். வாய்நிறைய தமிழ்மறைப் பாடல்களை நெக்குருக ஓதவேண்டும். இதுவே, இறைவரை நாம் அடையும் வழிமுறையாகும். எளிமையான பொருள்களான பூவும் சைவசமய வழிபாட்டில் ஓர் அருமையான பூசனைப் பொருளே. அதுவும் வாசமுள்ள பூக்கள் வழிபாட்டிற்கு உரியவை. தவிர, மிக எளிமையாக எல்லா இடங்களிலும் பூக்கள் கிடைக்கும். பூக்களைத் தூவி வழிபாடுசெய்வது கடினமல்ல. மிக மிக எளிமையானவை. அதனை நிறைவாகச் செய்து, இறைவர் அருளைப் பெறலாம் என்கின்றது அப்பரின் தேவாரம். ஆனால் இன்று பூக்களுக்குப் பதிலாக, பல நூறு வெள்ளிகளில், பலவாறு வழிபாடு நடக்கின்றது. இன்று நடைமுறை வழிபாட்டில், எளிமையான பூக்கள் பல நூறு வெள்ளி மாலைகளாகக் கட்டப்படுகின்றன. பூசனையும் பல நூறு வெள்ளிகளைத் தாண்டிய விலையுயர்ந்த பூசனையாக மாறுகின்றது. பல நூறு வெள்ளி மாலைகளை வைத்துப் பூசனை செய்தால்தான் இறைவர் அருள் தருவார் என்பது இல்லை. அவரவர் நிலைக்கு ஏற்ப, ஓரிரு பூக்களைப் பறித்துப் பூசனை செய்தால் போதுமானது. இல்லங்களில் நாமே பூச்செடிகளை நட்டு, பூக்களைப் பறித்துப் பூசனை செய்யலாம். இறைவர்*